1993 ஏப்ரல் 23]

452—

கெங்கம்பட்டு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்குதல்

*12816—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம், கெங்கம்பட்டு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் துவங்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) தற்பொழுது இல்லை,

(ஆ) வரும் ஆண்டுகளில் சாத்தியக்கூறுகள் இருப்பின், தகுதியின் அடிப்படையில் கெங்கம்பட்டு கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே புதுப்பாளையம் ஒன்றியத்தில் காரப்பட்டு குலால்பாடி ஆகிய இரு இடங்களில் இந்த மருத்துவமனைகள் இருக்கின்றன. இடைப்பட்ட கிராமங்களான கெங்கம்பட்டு, வாசுதேவன்பட்டு, கீழ்பளூர், மேல்பளூர் என்று அதிகமான கிராமங்கள் இருக்கின்றன, இங்கிருந்து காரப்பட்டு செல்வதாக இருந்தால் 8 கிலோ மீட்டர் ஆகிறது ; குலால்பாடி செல்வதாக இருந்தாலும் 8 கிலோ மீட்டர் ஆகிறது. ஏற்கனவே ஒரு ஏக்கர் நிலம் தருவதாகவும், மருத்துவமனைக்குத் தேவையான இடத்தை வாடகையில்லாமல் கொடுப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் கனிவுடன் இதைப் பரிசீலிப்பாரா என்று கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் புதுப்பாளையம் மற்றும் காட்டாம்பட்டு ஆகிய இரு இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் மூன்றாவது ஒரு

கால்நடை மருந்தகம் வேண்டுமென்று கேட்கிறார்கள். மருந்தகம் வேண்டும் என்பதற்கு, எந்த ஊரில் வேண்டுமென்று அந்த ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றித் தர வேண்டும்; அதற்குப் பின்னாலே இந்தத் துறைக்கு ஒரு ஏக்கர் நிலத்தை அவர்கள் ஒப்படைக்க வேண்டும். அதற்குப் பிறகு ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே முதல் மருத்துவமனை துவக்கப்படவேண்டுமென்று சொன்னால் 25 சதவீதம் அந்த ஊராட்சி ஒன்றியம் தன்னுடைய நிதியிலேயிருந்து தர வேண்டும்; இரண்டாவது மருத்துவமனை வேண்டுமென்று சொன்னால் 50 சதவீதம் நிதியை அந்த ஊராட்சி ஒன்றியம் தர வேண்டும். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பது மூன்றாவது மருத்துவமனை. ஆகவே, அவர்கள் 75 சதவீதம் அந்தத் தொகையை அரசுக்குத் தருவார்கள் என்று சொன்னால் அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குலால்பாடி என்ற கிராமத்திலே இருப்பது ஆல்டர்நேட்டிவ் டேய்ஸ்—ஒன்றுவிட்டு ஒரு நாள் மருத்துவர்கள் சென்று மருத்துவம் பண்ணுவதுதானே தவிர, நிரந்தரமாக காரப்பட்டில் மட்டும்தான் இருக்கிறது. எனவே, பெரும்பாலும் செங்கம் பட்டு, காரேந்தல், பெரிய குளம், விஸ்வநாதபுரம் ஆகிய கிராமங்களினுடைய மக்களுடைய தொழிலே ஆடு வளர்க்கும் தொழில்தான். கிட்டத்தட்ட ஒரு கிராமத்திற்கு ஒரு வீட்டுக்கு 500 ஆடுகளாவது இருக்கின்றன. மேலும் வண்டி மாடுகள், கறவை மாடுகள், மற்றுமுள்ள இந்த மாடுகள் கிட்டத்தட்ட பத்தாயிரம் அளவில் இருக்கின்றன. பெரும்பாலும் மாடுகளுக்கு வரும் நோயான, கால்நடைகளுக்கு வரும் நோயான கோமாரி நோய்கள், தொண்டை அடைப்பான் ஆகிய வியாதிகள் வந்தால் அந்தக் கிராம மக்கள் நாட்டுப்புற வைத்தியம்தான் செய்கிறார்கள். இதனால் இறப்பு அதிகமாக ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவேதான், இந்தக் கேள்வியை நான் அழுத்தமாகக் கேட்கிறேன். பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள் சற்று விரைவாகப் பரிசீலிப்பார்களா என்று கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசினுடைய நிதி நிலை தாராளமாக இருக்கின்ற பொழுது புதிய மருத்துவமனைகள் துவக்குவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம். இது செங்கம் தொகுதியைப் பற்றிய கேள்வி.

திரு. கி. தருமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, இதுசம்பந்தமாகப் பொதுப்படையான கேள்வியைக் கேட்கிறேன். மக்களை நாடி மருத்துவ முகாம் செல்லும் இந்தப் புரட்சித்

1993 ஏப்ரல் 23]

தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில், கால்நடைகளுக்கும் அதேபோன்று சிகிச்சை அளிக்க நம் அரசில் நிதிநிலைமை இல்லாத இந்த நேரத்திலேயும்கூட, ஒரு ஒன்றியத்திற்கு சுற்றுச் சூழல் மூலம் நடமாடும் ஒரு மருத்துவ முகாமை ஏற்படுத்தி, சில குக்கிராமங்களுக்கும் ஒரு வாரத்திற்கு ஒரு நாளாவது கால்நடைகளுக்கு மருத்துவம் செய்ய மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமானது. இன்றைய நாட்டிற்குத் தேவையானதும்கூட மாடுகளுக்கு நோய் வருகிறது என்று சொன்னால், அந்தக் கால்நடைகள் தம்முடைய நோயினுடைய தன்மையை, அவற்றின் உரிமையாளரிடம் சொல்ல முடியாது. அது தன்னுடைய உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு, சோர்ந்து படுத்துவிடும் நிலையிலே, அந்த மாடுகளை வளர்ப்பவர்கள் மருத்துவமனைக்குச் சென்று, டாக்டர்களை அழைத்து வருகிறார்கள். இன்றைக்கு, தமிழகத்திலே, இருக்கக்கூடிய அனைத்து கால்நடை மருந்தகங்களையும் உறைவிந்து சினையூட்டத்திற்கு மட்டுமே பெரிதும் பயன்படுத்தி வருகின்றார்கள். ஒரு முறை அந்த உறைவிந்து சினையூட்டத்தை செய்யக்கூடிய மருத்துவர், அந்தக் கால்நடை சினையாக இருக்கிறதா அல்லது, கருவுற்று இருக்கிறதா என்பதை அவர் போய்ப் பார்ப்பது கிடையாது. ஆனால், 3 மாதங்கள் அல்லது நான்கு மாதங்கள் அந்த மாடுகளை வளர்ப்பவர்கள் பார்த்து விட்டு, பலன் இல்லை என்று அவர்களாகவே அறிந்த பின்னால் மீண்டும் அந்த மாட்டை கால்நடை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார்கள். அதற்காகத்தான் நம்முடைய அரசு தீவிரமாக ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று பரிசிலித்துக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கால்நடை மருத்துவர் இருக்கிறார். அந்த ஊராட்சி ஒன்றியத்திலேயே கால்நடை மருத்துவர் ஒருவர் இருக்கிறார். அதற்குக் கீழே கால்நடை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து ஒவ்வொரு கால்நடை மருத்துவரும், ஒரு நாளைக்கு ஒரு பகுதி என்று பிரித்துக் கொடுத்து, அந்தக் கிராமத்திற்கு அவர்கள் செல்ல வேண்டும். அங்கு கால்நடையைப் போய் அவர்களே பரிசோதிக்க வேண்டும். அந்த உரிமையாளர்களிடத்திலே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஒரு கால்நடைக்கு ஒரு அடையாள அட்டையை வழங்கியிருக்கிறது. அந்த அடையாள அட்டையிலே அந்த மருத்துவர், இந்த மாட்டை அல்லது இந்த ஆட்டை நான் பரிசோதனை செய்தேன்; அதற்கு இன்ன நோய் இருந்தது; இந்த மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பை அவர் எழுதி வைக்க வேண்டும். அதே நேரத்திலே அந்தக்

கால்நடையை வளர்ப்பவர்கள், அந்த மருத்துவர் கொண்டு வருகிற ரிஜிஸ்டர் புத்தகத்திலே, மருத்துவர் வந்தார்; மருந்தை நான் வாங்கித் தந்தேன்; அவர் சிகிச்சை அளித்தார் என்று எழுதித் தரவேண்டும். இந்த திட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்ல ஆட்சியில் நாங்கள் பரிசீலித்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 453, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

453—

காட்டுமன்னார் கோவிலில் 'சென்ட்' தொழிற்சாலை நிறுவுதல்.

*14690—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவிலில் மல்லிகைப்பூ அதிகமாக விளைவதால் இங்கே 'சென்ட்' தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் வேளாண்மைத் துறையின் பதிலுரையிலே, கவிதைமழைக் கொட்டியதைப் போல, 'சென்ட்' உபயோகிக்கும் காதலர்களிடையே கவிதை அருவி கொட்டுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. மேலை நாடுகளில், மகளிர் மணம்வீசும் மலர்களைச் சூடுவதில்லை. மாறாக, 'சென்ட்' அதிகமாக உபயோகிக்கிறார்கள்.